## மீனவர் - கச்சத்தீவுப் பிரச்சினைகள் குறித்து எந்த முன்னெடுப்பும் இல்லை!

# பிரதமரின் இலங்கைப் பயணம் ஏமாற்றமளிக்கிறது!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.4.2025) சட்டமன்றப் பேரவையில், மீனவர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு அறிவிப்புகளை விதி எண் 110–ன் கீழ் அறிவித்தார்.

## ரூ.576 கோடியில் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு சிறப்புத் திட்டங்களை அறிவித்து – பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஏப். 9-**

**தமிழ்நாடு மீனவர் நலன் தொடர்பாக, சட்டமன்றப் பேரவையில்,முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விதி 110ன் கீழ் அளித்த அறிக்கையில், ரூ.576 கோடியில் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு சிறப்புத் திட்டங்களை அறிவித்தார். மேலும் பிரதமரின் இலங்கைப் பயணம் ஏமாற்றமளிக்கிறதுஎன்றும் மீனவர் - கச்சத்தீவுப் பிரச்சினைக் குறித்து எந்த முன்னெடுப்பும் இல்லை என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு மீனவர் நலன் தொடர்பாக, சட்டமன்றப் பேரவையில்முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் விதி 110ன்கீழ் அளித்த அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டு மீனவர் நலன் குறித்து விதி எண் 110ன்கீழ் இந்த அறிக்கையை தங்கள் அனுமதியோடு நான் அறிவிக்கிறேன்.

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுக்க, கடந்த 2.4.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் மீனவர்கள் பிரச்சினை குறித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். அப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கச்சத்தீவை மீட்க வேண்டுமென்றும், இலங்கைச் சிறையில் வாடும் நம் மீனவர்கள் அனைவரையும்விடுதலைசெய்ய வேண்டுமென்றும், இலங்கைக் கடற்படை கைப்பற்றியுள்ள படகுகளைத் திருப்பித் தரவேண்டும் என்றும் அதில் வலியுறுத்தியிருந்தோம். இலங்கை சென்றிருந்த இந்தியப் பிரதமர் அவர்கள் இதுகுறித்து இலங்கை அரசுடன் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதிலே குறிப்பிட்டிருந்தோம். அந்தத் தீர்மானத்தை இந்தியப் பிரதமர் அவர்களுக்கு உடனடியாக அனுப்பியும் வைத்திருந்தோம்.

**தமிழக மீனவர்கள் - படகுகள் விடுவிக்கப்படாதது வருத்தம்!**

இந்த நிலையில், இந்தியப் பிரதமர் அவர்கள் இலங்கை சென்றிருந்தார். அப்போது மீனவர் விடுதலை மற்றும் கச்சத் தீவு குறித்து பெரிய அளவிலான முன்னெடுப்பு கள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும், சிறையில் வாடும் 97 மீனவர்களும், சிறை பிடிக்கப்பட்ட படகுகளும் மீட்கப் பட்டுதாயகம் திரும்புவார்கள் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறாதது நமக்கெல்லாம் மிகுந்த வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் அளிக்கிறது.

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் அடிக்கடி அதிக எண்ணிக்கையில் கைது செய்யப்படுவது கடந்த சில மாதங்களாக நம் அனைவரையும் கவலைக்கு உள்ளாக்கி வரக்கூடிய செய்தியாகும். ஒன்றிய அரசும், இந்தியப் பிரதமரும் நமது கோரிக்கைகளைப் புறக்கணிக்கின்றார்கள் என்றே கருத வேண்டியுள்ளது. ஒன்றிய அரசு எப்படி நடந்து கொண்டாலும், நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நாம் தவறமாட்டோம். கழக அரசு அவர்களுக்கு எப்போதும் துணை நிற்கும். மீனவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தல், அவர்களது மீன்பிடித் தொழிலுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவது போன்ற பல்வேறு புதிய திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்தி வருகிறோம்.

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்கள், குறிப்பாக, மன்னார் வளைகுடா பகுதியில் அமைந்துள்ள இராமநாதபுரம், நாகப்பட்டினம், தூத்துக்குடி, புதுக்கோட்டை, திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் கைது நடவடிக்கைகளால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

இப்பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள், தங்கள் பாரம்பரிய மீன்பிடிப்புப் பகுதிகளில் மீன்பிடிப்பிற்குச் செல்லும்போது அவர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களைக் களைவதற்கு ஒன்றிய அரசிற்கு அழுத்தம் கொடுத்து வந்தாலும் கூட, இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து நமது மீனவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களுடைய படகுகள் சிறைப்பிடிக்கப்படுவதும், அந்தப் படகுகள் நாட்டுடைமையாக்கப்படுவதுமான செயல்கள் நம்முடைய தொடர் வலியுறுத்தல்களையும், கோரிக்கைகளையும் மீறி நடைபெற்று வருகிறது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

### வக்ஃபு திருத்தச் சட்டம் – 2025–ஐ எதிர்த்து

## தி.மு.க. உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனு!

### ஆ.இராசா எம்.பி. சார்பில் – பி.வில்சன் எம்.பி. தாக்கல்!

புதுடெல்லி, ஏப்.9-

வக்ஃபு திருத்தச் சட்டம், 2025-னை எதிர்த்து தி.மு.க. சார்பில், கழகத் துணைப் பொதுச்செயலாளரும் - வக்ஃபு மசோதா தொடர்பான நாடாளுமன்றக் கூட்டுக்குழு உறுப்பினருமான ஆ.இராசா, எம்.பி., மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், எம்.பி., மூலம் நேற்று முன்தினம் (07.04.2025), உச்ச நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு ஒன்றினைத் தாக்கல் செய்துள்ளார்.



அம்மனுவில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. அரசு, சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் சமூக - பொருளாதார மேம்பாட்டிற்காக தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. வக்ஃபு (திருத்தம்) மசோதா, 2025 அரசியலமைப்பிற்கு விரோதமானது மற்றும் முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தின் உரிமைகள் மற்றும் நலன்களை மோசமாக பாதிக்கும் என்பதால், அதை திரும்பப் பெறுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி, மார்ச் 27, 2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஒரு தீர்மானத்தை தி.மு.க. அரசு நிறைவேற்றியது.

, வக்ஃப் திருத்த மசோதா, 2025, நாடாளுமன்ற கூட்டுக்குழு உறுப்பினர்கள் மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய ஆட்சேபனைகளை முறையாகக் கருத்தில் கொள்ளாமலும் - இச்சட்ட திருத்தம் நிறைவேற்றிட பரவலான எதிர்ப்பு இருந்தபோதிலும் ஒன்றிய அரசால் நிறைவேற்றப்பட்டது. இரு அவைகளிலும் தி.மு.க. எம்.பி.க்கள் எழுப்பிய கருத்துகளும் பரிசீலிக்கப் படவில்லை.

வக்ஃபு (திருத்தம்) சட்டம், 2025, 06.04.2025 அன்று அறிவிக்கப் பட்டதிலிருந்து, முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தின் அடிப்படை உரிமைகள் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளன என்பதையும், இந்தச் சட்டத்தை உடனடியாக அமல்படுத்துவது தமிழ்நாட்டில் சுமார் 50 லட்சம் முஸ்லிம்களின் உரிமைகளையும், நாட்டின் பிற பகுதிகளில் உள்ள 20 கோடி முஸ்லிம்களின் உரிமைகளையும் மீறுகிறது மற்றும் பாரபட்சம் காட்டுகிறது என்பதையும் கருத்தில் கொண்டு, 2025 ஏப்ரல் 6 -அன்று அமலுக்கு வந்துள்ள வக்ஃப் திருத்தச் சட்டம்-2025னை ரத்து செய்ய வேண்டுமென தி.மு.க. சார்பில் துணைப் பொதுச்செயலாளர் ஆ. இராசா, எம்.பி., மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், எம்.பி., மூலம் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்.

# காலில் விழுந்து, பின் ஏமாற்றியது யார்?

## தியாகிகள் யார் என்பதைத் தோலுரித்துக் காட்டிய முதல்வர் மு.க.ஸ்டாலின்!

**சென்னை, ஏப். 9-**

**“காலில் விழுந்து பின் ஏமாற்றியது யார்?” என்பதையும், தியாகிகள் யார் என்பதையும் பேரவையில் தோலுரித்துக் காட்டினார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!**

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒரு பேட்ச் அணிந்து வந்திருந்ததோடு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி ஜீரோ அவரில் ஒரு பிரச்சினை குறித்து பேச முற்பட்டார். நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அப்பிரச்சினைக் குறித்து பேச பேரவைத் தலைவர் அனுமதி மறுத்தார்.

எனினும் எடப்பாடி பழனிச்சாமி உள்பட அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேச அனுமதிக்க வேண்டும் என்று கூச்சலிட்டவாறே இருந்தனர். பேரவைத் தலைவர் பதாகைகளை வைத்திருந்தவர்களை வெளியேற்றும் படி உத்தரவிட்டார். அதன் பிறகு அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேறினர்.

**அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுந்து பேசியதாவது :-**

இங்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்ளிட்ட அவரது கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பி, அதற்குப்பிறகு விவாதங்கள் நடைபெற்று, அவை முன்னவர் அவர்கள் அதற்கு உரிய விளக்கங்களைத் தந்து, நீங்களும் ஒரு முடிவெடுத்து, அதிலே திருப்தி அடையாத சூழ்நிலையில் அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்களது கையிலே ஒரு பதாகையைப் பிடித்துக் கொண்டு அதை இங்கே காண்பித்தார்கள். அதிலே வாசகம் ஒன்று எழுதப்பட்டிருந்தது. அதாவது, “அந்தத் தியாகி யார்?”, “அந்தத் தியாகி யார்?”, “அந்தத் தியாகி யார்?” என்று எழுதப்பட்டிருக்கிறது. Badgeம் அணிந்திருந்தார்கள். மறைந்த எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்டு, மறைந்த அம்மையார் ஜெயலலிதா அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட அ.இ.அ.தி.மு.க.வை, அவர்களுக்குப் பிறகு பொறுப்பேற்ற, இப்பொழுது எதிர்க் கட்சித் தலைவராக இருக்கக்கூடிய அவர்கள், தாங்கள் சிக்கியிருக்கக்கூடிய பல்வேறு வழக்குகளிலிருந்து, பல்வேறு பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக இன்றைக்கு அடகு வைத்து, யாருடைய காலிலே போய் விழுந்தார்கள் என்பது தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**அம்மையாரை ஏமாற்றியது யார்?**

இன்றைக்குஅப்படிஇவர்கள்விழுந்ததைப் பார்த்து நொந்துபோய் noodles ஆக மாறியிருக்கக்கூடிய அ.இ.அ.தி.மு.க. தொண்டர்கள் தான் இன்றைக்குத் தியாகிகளாக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்றைக்கு முதலமைச்சர் பதவியை வாங்குவதற்காக யாருடைய காலிலே இவர் விழுந்தார் என்பது தெரியும்; பிறகு அந்த அம்மையாரையே ஏமாற்றிவிட்டுப் போனார். ஏமாற்றமடைந்த அவர்தான் இன்றைக்குத் தியாகியாக இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்தத் தியாகி யார்? என்ற வாசகத்தை இங்கே எழுதி எடுத்து வந்ததற்காகத் தான் இந்த விளக்கத்தை நான் தந்திருக்கின்றேனே தவிர, வேறல்ல என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிலளித்து பேசினார்



திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 35வது வார்டு, வாலிபாளையம் சடையப்பன் கோயிலில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில், கோவில் முன்பு கட்டப்பட்ட உயர்மட்ட நிழற்கூரையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மண்டலத்தலைவர் தம்பி ஆர்.கோவிந்தராஜ், மாமன்ற உறுப்பினர் எஸ்.முத்துக்கிருஷ்ணன் (எ) செந்தூர் முத்து, வட்டக் கழக செயலாளர் ஆட்டோ பி.தங்கராஜ் முன்னிலையில் மத்திய மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் திறந்து வைத்தார். இதில் மாவட்ட துணை செயலாளர், வழக்கறிஞர் எஸ்.குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.சசிக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



ஒன்றிய பா.ஜ.க. அரசு இஸ்லாமியர்களின் வக்ஃபு சட்டத்தில் கொண்டுவந்திருக்கும் திருத்தங்களை தமிழ்நாடு முதல்வர் உறுதியோடு எதிர்க்கும் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்தும், பா.ஜ.க. அரசுக்கு தங்கள் கண்டனத்தை தெரிவிக்கும் வகையிலும், திருவாரூர் மாவட்டத்தின் அனைத்து பள்ளிவாசல்களிலும் நடைபெற்ற வெள்ளிக்கிழமை சிறப்பு தொழுகையின்போது இஸ்லாமியர்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து தொழுகையில் ஈடுபட்டனர்.கொல்லாபுரம் ஜாமியா மஸ்ஜித் பள்ளிவாசலில் ஜமாஅத் தலைவர் முனைவர் செல்லப்பா தலைமையில் இஸ்லாமியர்கள் கருப்பு பேட்ஜுடன் தொழுகைக்கு வந்தனர்.